இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 12-08-2024

# வக்ஃப் சட்டத்திலும் வன்மம்

பலிக்கும் வரை பாசிசத்தைப் புகுத்துவது பா.ஜ.க.வின் பாணி. அதில் ஒன்றுதான் வக்ஃப் வாரிய சட்டத்தைத் திருத்த முனைவது ஆகும். பலரும் எதிர்த்த நிலையில் நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு இதனை அனுப்ப ஒப்புக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

வக்ஃப் வாரியச் சட்டம் - 1995 என்ற பெயரை ஒருங்கிணைந்த வக்ஃப் மேலாண்மை, அதிகாரமளித்தல், திறன் மேம்பாடு சட்டம் - 1995 என்று பெயர் மாற்றம் செய்துள்ளார்கள்.

**வக்ஃப் வாரியம் எதற்காக உருவாக்கப்பட்டதோ, அதன் உண்மையான நோக்கம் என்னவோ அதற்கு விரோதமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர முனைகிறது பா.ஜ.க. அரசு. வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவின்படி வக்ஃப் வாரியத்தின் சொத்துகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் மாற்றப்படுகிறது.** வக்ஃப் வாரிய சட்டம் - 1995 இன் படி அமைந்துள்ள அதிகாரம் நீக்கப்படுகிறது. அந்தச் சட்டத்தின் 40 ஆவது பிரிவு நீக்கப்படுகிறது. மத்திய வக்ஃப் கவுன்சில் என்பதை உருவாக்குகிறார்கள். அதில் முஸ்லீம்கள் மட்டுமல்ல, முஸ்லீம் அல்லாதவர்களும் இருப்பார்களாம். எதற்கு இந்த வேண்டாத வேலையைச் செய்ய வேண்டும்?

தி.மு.க. நாடாளுமன்றக் குழுவின் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசும் போது, **"இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் வக்ஃப் வாரியத்தில் அங்கம் வகிக்க இந்த மசோதா அனுமதிக்கிறது. அதே போன்று ஒரு இந்துக் கோவிலை நிர்வகிக்க அனுமதிப்பீர்களா? அல்லது ஒரு சீக்கியம் அல்லது பார்ஸி மத விவகாரங்களில் இப்படி அனுமதிக்க முடியுமா? முடியாது"** என்று குறிப்பிட்டார். அதற்கு நேரடியான பதிலை ஒன்றிய சட்ட அமைச்சரால் சொல்ல முடியவில்லை.

வக்ஃப் வாரியத்தின் அதிகாரத்தை எதற்காக ஒரு கவுன்சில் வசம் கொடுக்க வேண்டும்? எது வக்ஃப் சொத்து என்பதை வரையறுக்கவே அந்த வாரியம் இருக்கிறது. அதிகாரப் பறிப்புக்கு பின்னால் இருக்கிற சதி என்ன? காலப் போக்கில் என்ன செய்யும் திட்டம் இருக்கிறது? சொத்து யாருடையது என்பதை முடிவெடுக்கும் அதிகாரம், மாவட்ட ஆட்சியர்களுக்கு ஏன் வழங்க வேண்டும்?

**லட்சக்கணக்கான ஏக்கர் நிலமும், லட்சம் கோடி பண மதிப்பும் கொண்டவை இந்தச் சொத்துகள். இதனை மாவட்ட ஆட்சியர்கள் கைக்குள் ஒப்படைக்கத் துடிக்கும் மர்மம் என்ன?**

வக்ஃப் வாரிய நிலங்களை கட்டாயமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டுமாம். வக்ஃப் நிலமா இல்லையா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் முடிவு செய்வார்களாம். சிறுபான்மைச் சமூகத்தினர் அவர்களின் சொத்துகளை நிர்வகிக்க அரசமைப்புச் சட்டம் பிரிவு 30 அதிகாரம் தருகிறது. அதனை மீறுவது அல்லவா இந்தப் பிரிவு? வக்ஃப் சொத்தா இல்லையா என்பதை ஆராய்வதற்குதான் வக்ஃப் வாரியம் இருக்கிறது. அந்த வேலையை மாவட்ட ஆட்சியர்களிடம் தரும் மர்மம் என்ன?

**வக்ஃப் வாரியச் சட்டத்தை மக்களவையில் தாக்கல் செய்து பேசினார் சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு. அறிமுக நிலையிலேயே 'இந்தியா' கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தார்கள். இது கூட்டாட்சி தத்துவத்துக்கும் அரசமைப்பு சட்டத்துக்கும் எதிரானது என்று சொல்லி எதிர்த்தார்கள்.** "வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதா எந்தவொரு மத அமைப்பின் சுதந்திரத்திலும் தலையீடு அல்லது குறுக்கீடு செய்யாது" என்று சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு சொன்னார். அவர் சொன்ன வார்த்தைக்கு அவருக்கே அர்த்தம் தெரியுமா எனத் தெரியவில்லை.

இந்தச் சட்டமே இசுலாமியர் சொத்து தொடர்பானதை கண்காணிக்கும் வக்ஃப் வாரியம் தொடர்புடையது. அதன் அதிகாரத்தை குறைப்பது என்பது இசுலாமியர்களின் மத சுதந்திரத்தில் தலையிடுவதுதானே? அந்த அமைப்புக்குள் இசுலாமியர் அல்லாதவர்களை நுழைப்பது என்பது அவர்களது மத உரிமையில் குறுக்கிடுவதுதானே?

**மதம் சார்ந்த நிலையை ஒரு அரசாங்கம் எதற்காக எடுக்க வேண்டும்? ஒரு மதத்தை ஒடுக்குவதற்காக ஒரு சட்டத்தை எதற்காகக் கொண்டு வர வேண்டும்? ஒரு குறிப்பிட்ட மதத்தின் சுதந்திரத்தில் எதற்காக தலையிட வேண்டும்? இது என்ன வகைப்பட்ட குணம்? "நீதி, சுதந்திரம், அதிகாரப் பகிர்வு ஆகிய தத்துவங்களை மீறும் வகையில் இந்த மசோதா அமைந்துள்ளது. முஸ்லீம்களின் எதிரி பா.ஜ.க. என்பதற்கு இந்த மசோதா ஒன்று போதும்"** என்று நாடாளுமன்றத்தில் மஜ்லீஸ் கட்சித் தலைவர் ஓவைசி சொல்லி இருக்கிறார்.

அரசியல் நோக்கங்களுக்காகத்தான் இது செய்யப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சிகள் அனைத்தும் சுட்டிக்காட்டி உள்ளது. அரியானா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் சட்டசபை தேர்தல் வரப் போகிறது. அதனால் தான் இதனைச் செய்கிறார்கள். பா.ஜ.க. இதுபோல் எத்தனையோ பம்மாத்துகளை கடந்த காலங்களில் காட்டி விட்டது. அது எதுவும் அந்தக் கட்சிக்கு பயனளிக்கவில்லை. இருந்த வாக்கு வங்கியையும் பா.ஜ.க. இழந்ததுதான் மிச்சம். ஆட்சி அமைப்பும் பெரும்பான்மையையும் பெறவில்லை. பல தொகுதிகளில் சதி செய்து தேர்தல் முடிவுகளையும் மாற்றி இருக்கிறார்கள். 'மதம்' என்ற இஞ்சின் ஓடவில்லை என்பது இன்னமும் பா.ஜ.க.வுக்கு புரியவில்லை.

**இந்தச் சட்டம் அரசியல் சாசனத்துக்கு எதிரானது. மத சுதந்திரத்துக்கு எதிரானது. வழிபாட்டு உரிமைக்கு எதிரானது. அனைவர்க்கும் இந்த நாடு சொந்தம் என்ற தத்துவத்துக்கு எதிரானது. வேற்றுமையில் ஒற்றுமைக்கு எதிரானது. எனவே இந்தச் சட்டத்தை முழுமையாக நிராகரிக்க வேண்டும்.**

## கோவையில் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

கோவை, ஆக. 12-

கோவை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் வடக்கு மற்றும் தெற்கு நகர பகுதியைச் சார்ந்த தி.மு.க.வினர் வடக்கு நகர செயலாளர் முகமது யூனுஸ் மற்றும் தெற்கு நகர செயலாளர் முனுசாமி ஆகியோர் தலைமையில் கலைஞரின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மேட்டுப்பாளையம் பஸ் நிலையம் அருகில் வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப்படத்திற்கு கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் சி.ஆர்.இராமசந்திரன், பாஅருண்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், மேட்டுப்பாளையம் நகர மன்றத் தலைவர் மெஹரிபா பர்வின்அசரப்அலி, துணைத் தலைவர் அருள்வடிவு முனுசாமி , கவுன் சிலர் ஒ. கே.நடராஜன் உள்ளிட்ட பல் வேறு அணிகளை சார்ந்த கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்வில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், செ.ஸ்டாலின்குமார், எம்.பழனியாண்டி, மாவட்ட ஊராட்சித்தலைவர் இராஜேந்திரன், மண்டல தலைவர் மதிவாணன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.விஜயலெட்சுமி, ஜமால் முகமது கல்லூரியின் தாளாளர் மற்றும் நிர்வாகிகள், பேராசிரியர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள

# மீனவர்களையும் - மீன் பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடுமாறு வலியுறுத்துவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, ஆக. 12 -**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு 10.08.2024 அன்று எழுதியுள்ள கடிதத்தில்,

"இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 35 மீனவர்கள், INDTN10MO1825, INDTN10MO1826, INDTN10MO1458 மற்றும் INDTN10MO1487 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட அவர்களது நான்கு மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 9.8.2024 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் ஆழ்ந்த வேதனையும் கவலை அளிப்பதாகவும் உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இரண்டு மீனவர்கள் உயிரிழந்த நிலையில், மீனவர் பிரச்சனை தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாட்டிலிருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் சந்தித்ததை நினைவுகூர்ந்துள்ள முதலமைச்சர் அவர்கள், அதற்குப் பின்னரும் குறிப்பிடத்தக்க நிவாரணமோ தீர்வோ ஏற்படவில்லை என்று வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

நமது மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படும் சம்பவங்களால், மீனவக் குடும்பங்கள் மிகுந்த துயரங்களுக்கு ஆளாவதோடு, கடலோர மீனவ சமுதாயத்தினரிடையே அச்ச உணர்வும், அவர்களது வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையும் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள்,

இதுபோன்ற கைது நடவடிக்கைகள் மீனவ குடும்பங்களின் மன நம்பிக்கையை குலைத்து, பெருத்த நிதி சுமையை ஏற்படுத்தி, அவர்களது பாரம்பரிய மீன்பிடித் தொழிலை கடினமாக்கி உள்ளதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்திடவும், இது போன்ற கைது சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க நிரந்தரத் தீர்வை ஏற்படுத்திடவும் வலுவான தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும் எனக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கடலோர மீனவ சமுதாயத்தினரின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவித்து, தாயகத்திற்கு அழைத்து வருவதை உறுதி செய்திட வேண்டும்.

இவ்வாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் இந்தியாவிலேயே முன்னோடி திட்டம்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

*புதுக்கோட்டை. ஆக. 12-*

*தமிழக கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் "தமிழ்ப்புதல்வன்" திட்டத்தினை கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு, மாணவர்களுக்கான தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் ஏராளமான கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.*

*இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழ்ப்புதல்வன் திட்டம் இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாகவும், வழிகாட்டும் திட்டமாகவும் இதை தமிழக முதல்வர் கொண்டு வந்துள்ளார்.*

*தமிழகத்தில் அரசு பள்ளியில் தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாகவும், அதில் படிக்கும் மாணவர்கள் இடை நிற்றலை தவிர்த்தும் அவர்கள் உயர் படிப்பிற்கு சென்று, அவர்கள் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளாக உயர் பொறுப்பிற்கு சென்று, நமது தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், தமிழ்ப்புதல்வன் என்னும் உன்னத திட்டத்தை தமிழக முதல்வர் தொடங்கி வைத்துள்ளார்.*

*வஃபு வாரிய திருத்தச் சட்டம், நிலை குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது திரும்ப வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று செய்தியாளர்களிடம் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.*

# தமிழ்நாடு முதல்வரின் அடுத்த சாதனையான "தமிழ்ப் புதல்வன் திட்டம்!"

## திருவாரூரில் பூண்டி கலைவாணன் ஏ.டி.எம்.கார்டை மாணவர்களுக்கு வழங்கினார்!

*திருவாரூர்,ஆக12.*

*தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அடுத்த சாதனையான உயர்கல்வி பயிலும் அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ்வழி) மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் "தமிழ்ப் புதல்வன் திட்டத்தை " தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரிலிருந்து காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.*

*அதனைத்தொடர்ந்து குடவாசல் வட்டம் மஞ்சக்குடி சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் 500 மாணவர்களுக்கு "தமிழ்ப் புதல்வன் திட்டம்" கீழ் ரூ.1000 பெறுவதற்கான பற்று ஏடிஎம் அட்டைமற்றும் உயர் கல்வி வழிகாட்டு கையேட்டினை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார்,மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய செயலாளர் ப.பிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.*

*தமிழ்நாடு அரசின் சாதனை திட்டமான தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தகுதியுடைய மாணவர்கள் பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு , தொழிற்கல்வி , பொறியியல் , மருத்துவம் போன்ற உயர்கல்விகளில் பயின்று, இடைநிற்றல் இன்றி படிப்பை முடித்து வெளியில் செல்லும் வரை பிரதி மாதம் ரூ.1000ம் உதவித்தொகை அவர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது .*

*திருவாரூர் மாவட்டத்தில் UMIS மூலம் பெறப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள், மத்திய பல்கலைக்கழக மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள், ஐ.டி.ஐ. மாணவர்கள், மருத்தும் பயிலும் மாணவர்கள், பாலிடெக்னிக் பயிலும் மாணவர்கள் ஆக மொத்தம் 4054 மாணவர்களில், நேற்றைய தினம் 500 மாணவர்களுக்கு "தமிழ்ப் புதல்வன் திட்டம்" கீழ் ரூ.1000 பெறுவதற்கான ஏடிஎம் அட்டை மற்றும் உயர்கல்வி வழிகாட்டு கையேட்டினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலை வாணன் வழங்கினார்.*

திண்டுக்கல் மாவட்டம், வி.கூத்தம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பாஸ்கரன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், மாவட்டக் கல்வி அலுவலர்(பொ) சண்முகவேல், வீரக்கல் ஊராட்சி மன்றத் தலைவர் இராஜேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.